**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.739/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | மாரியப்பன், வயது 54 |
| Father Name/Husband Name | : | கிருஷ்ணசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of July 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். உதவி ஆய்வாளர் அருள்சாம்ராஜ், தலைமை காவலர் பாலகுருநாதன் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.03.2025 ஆம் தேதி 21.30 மணிக்கு மேற்படி தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி பேச்சியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.65/2025 BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3) and 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். (**அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).
2. அசல் புகார்வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை மேற்படி உதவி ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை மேற்படி உதவி ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 17.03.2025 ஆம் தேதி 22.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலையரசன் மற்றும்

கௌதம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பின்பு 17.03.2025 ஆம் தேதி வாதியின் வீட்டின் முன்பு வைத்து பிளாஸ்டிக் டிரம் மூடியை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். (**அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், பிளாஸ்டிக் டிரம் மூடி ஒன்று அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** 18.03.2025 ஆம் தேதி எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்துள்ளார்.
4. பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. திலிப்பன் மகாராஜனை விசாரித்து அ.சா.1 ன் காயச்சான்றை பெற்றுள்ளார். (**அந்த காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகவும், காயத்தகவல் அ.சா.ஆ.9 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் விசாரணையை முடித்து 25.03.2025 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5 நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 புகார் கொடுத்ததாகவும் சொல்வதும் அதனை பெற்று நிலைய காவலர் வழக்கு பதிவு செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

7.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.